# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**SPECIAL COURT TO DEAL WITH THE CASES OF OFFENCES IN CONTRAVENTION OF THE PROVISIONS OF THE MINES AND MINERALS (D&R) ACT, 1957, MADURAI**

**************

| | | |
|---|---|---|
| Case No | : | Spl.S.C.No.25/2021 |
| Deposition of witness | : | LW 3 / PW 21 |
| Name | : | **திரு.பழனியாண்டி** |
| Father's Name | : | பாலுச்சாமி |
| Village | : | காட்டுக்குளம் புதூர் |
| Taluk | : | மதுரை கிழக்கு |
| Calling | : | கிராம உதவியாளர் ஓய்வு |
| Age | : | 65/26 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.08.2026**

5, 6 எதிரிகள் ஆஜர். மற்ற எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சி தொடங்கிய நேரம் : 12.42 PM

**முதல் விசாரணை :**

நான் காட்டுகுளம் புதூரில் குடியிருந்து வருகிறேன் . நான் கிராம உதவியாளராக 1991-2021 வரை இடையபட்டி கிராமத்தில் பணிபுரிந்தேன் . என்னுடன்

NANTHINI R JEGANATHAN

Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.04 17:57:00 +0530

பாசி என்பவரும் பணிபுரிந்தார் . 2013 ல் பணிபுரிந்து வந்தபோது கிரானைட் கற்கள் அளவீடு செய்தார்கள் . அப்போது அனுப்குமார் , வேல்மணி என்பவர்கள் சர்வே எண்.56/1, 56/2, 56/3, 56/4, 56/5 ஆகிய எண்களில் கிரானைட் குவாரி செய்ய அனுமதி பெற்று குவாரி செய்து வந்தார்கள் . அப்போது சிறப்பு குழு வந்து அளந்தார்கள் . அளந்தபோது அருகில் சர்வே எண் .55 அரசு புறம்போக்கில் கல் வெட்டி எடுத்திருப்பதாக கிராம நிர்வாக அதிகாரியிடம் சொன்னார்கள் . கிராம நிர்வாக அதிகாரி 2013 - 7 வது மாதத்தில் ஒத்தக்கடை காவல் நிலையத்தில் சென்று புகார் கொடுக்க சொன்னார்கள். கிராம நிர்வாக அதிகாரி நர்கிஸ் புகார் கொடுத்தார்கள் . நானும், பாசியும் உடன் இருந்தோம் . மூன்று நாட்கள் கழித்து ஆய்வாளருடன் ஒரு குழு வந்து அந்த இடத்தை அளந்து படம் வரைந்து மார்க் செய்தார்கள் . பார்வை மகஜர் தயார் செய்து என்னிடமும் , என்னுடன் வேலை பார்த்த பாசியிடமும் கையெழுத்து வாங்கினார்கள். அந்த பார்வை மகஜரில் நான் கையெழுத்திட்டுள்ளேன் . என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான் . மேற்படி பார்வை மகஜர் ஏற்கனவே Ex.P.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பின்பு 5 மாதம் கழித்து 12 வது மாதம் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு வரச்சொன்னார்கள். நானும், பாசியும் சென்றோம். அங்கு வேல்மணி என்பவரிடம் வாக்குமூலம் வாங்கி அந்த வாக்குமூலத்தில் நானும், பாசியும் சாட்சியாக கையெழுத்து செய்தோம். அந்த வாக்குமூலத்தின் அ னுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே Ex.P.6 ஆக

NANTHINI R JEGANATHAN
Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.04 17:57:06 +0530

குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு இடையபட்டிக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு 6 கற்களை கைப்பற்றினார்கள். அது பற்றி எங்களுக்கு தெரியும். இது சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தனர்.

**1 முதல் 3, 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

காட்டுக்குளம் புதூர் எந்த பஞ்சாயத்தை சேர்ந்தது என்றால் பனைகுளம் பஞ்சாயத்தை சேர்ந்தது. தாசில்தார், அவருக்குக் கீழ் வருவாய் ஆய்வாளர், அவருக்குக் கீழ் கிராம நிர்வாக அதிகாரி, அவருக்குக் கீழ் கிராம உதவியாளர் என்றால் சரிதான். இடையபட்டிக்கு என்று கிராம நிர்வாக அதிகாரி, கிராம உதவியாளர்கள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். அந்த இடத்தை சோதனை செய்து பார்வை மகஜர் தயார் செய்வதற்கு சாட்சியாக இருப்பதற்குத்தான் நான் சென்றேன் என்றால் சரிதான். எனக்கு சொந்த ஊர் காட்டுக்குளம்புதூர் என்றால் சரிதான். நான் சிறுவயதில் இருந்து அங்கு தான் இருக்கிறேன். மேலூர், கீழவளவு சுற்றுப்புறங்கள் விவசாய நிலங்கள் என்றால் சரிதான். அனைத்தும் மூன்று போகம் ஆற்றுப்பாசனம் விளையக்கூடியது என்றால் இரண்டு போகம் தான் விளையும், மூன்று போகம் விளையாது. மூன்று போகம் விளையும், பிறகு காலப்போக்கில் அது இரண்டு போகமாக மாறியது, பின்பு காலப்போக்கில் அது ஒருபோகமாக மாறிவிட்டது என்றால் சரிதான். எங்கள் ஏரியாவில் முல்லைஆற்று பாசனம் என்றால் சரிதான். மழைக்காலங்களிலும், தண்ணீர் நிறைந்த காலங்களிலும் விவசாயத்திற்கு தண்ணீர்

NANTHINI R JEGANATHAN
Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.04 17:57:11 +0530

திறந்துவிடுவார்கள் என்றால் சரிதான். மழை ஒழுங்காக பெய்தால் வயல், வாய்க்கால், குளம், பள்ளம் நிரம்பிவிடும் என்றால் சரிதான். 2013 ல் நாங்கள் சென்றதாக சொல்வது தாசில்தார் உத்தரவிட்டுத்தான் நாங்கள் சென்றோமா என்றால் ஞாபகம் இல்லை . கிராம நிர்வாக அதிகாரி சொன்னார், சென்றோம். நிலம் அளக்க சென்றால் எனது வேலை கம்பிபோடுவது என்றால் சரிதான் . அந்த கம்பி ஒரு செயினாக இருக்கும் , அதில் ஒவ்வொன்றையும் லிங்க் என்று சொல்வார்கள் என்றால் சரிதான் . நாங்கள் அந்த இடத்திற்குசென்று கம்பி போட்டோமா என்றால் ஞாபகம் இல்லை . சர்வே செய்வது எப்படி என்று தெரியும் என்றால் தெரியும் . அதற்கு ஒரு கீ ஸ்டோன் இருக்கும் என்றால் சரிதான் . அது ஊர் எல்லையில் இருக்கும் என்றால் சரிதான் . நானோ, என்னுடன் வந்தவர்களோ அந்த கீ ஸ்டோனை பார்த்தோமா என்றால் நிறைய பார்த்தார்கள். அளவெடுப்பது என்பது கீ ஸ்டோனில் இருந்து தான் எடுக்கப்படும் என்றால் சரிதான் . அன்றைய தினமும் அவ்வாறு தான் அளவு எடுக்கப்பட்டதா என்றால் ஞாபகம் இல்லை. எனக்கு கற்கள் பல வகைப்படும் என்பது தெரியும் என்றால் அது எனக்கு தெரியாது . கிரானைட் எப்படி இருக்க வேண்டும் , அதற்கு என்ன அளவுகள் இருக்க வேண்டும் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கிரானைட் கற்கள் வெட்டி எடுக்கும்போது அதிலிருந்து சில கற்கள் தனியாக வந்து சிதறி கிடக்கும் என்றால் சரிதான் . அந்த கற்கள் எதையும் எடுத்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை . கிரானைட் முறைகேடுகள் குறித்து பல

NANTHINI R JEGANATHAN
Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.04 17:57:16 +0530

காலமாக பல சோதனைகள் பல இடங்களில் நடந்தது என்றால் சரிதான் . Ex.P.5 ல் என்ன எழுதியிருக்கிறது என்று தெரியுமா என்றால் மறந்துவிட்டேன் , ஞாபகம் இல்லை. Ex.P.5 எழுதிய போது நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அதில் என்னென்ன முறைகேடுகள் என்று எழுதப்பட்டிருந்ததா என்றால் ஞாபகம் இல்லை . Ex.P.5 ல் எழுதியதில் நிலத்தின் மீதோ , நிலத்தின் அடியிலோ, வேறு இடங்களிலோ கற்கள் இருந்ததாகவோ , பார்த்தாகவோ எழுதப்பட்டதா என்றால் ஞாபகம் இல்லை. நான் 6 கற்கள் எடுத்ததாக சொல்வதில் அந்த கற்களை அளந்து பார்த்தார்களா என்றால் ஞாபகம் இல்லை . எதிரி வேலுமணியை நான் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் சொன்ன முறையில் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றும் , அதன்படி 6 கற்கள் எடுக்கப்படவில்லை என்றும் , இந்த வழக்கிற்காக இந்த ஆவணங்களும், பொருட்களும் தயார் செய்யப்பட்டுள்ளது என்றா ல் சரியல்ல . காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு யார் வரச்சொன்னது என்றால் கிராம நிர்வாக அதிகாரிதான் போகச்சொன்னார் . எங்கள் கிராமத் தின் எல்லையைத்தாண்டி செல்வதற்கு நாங்கள் வட்டாட்சியரிடம் அனுமதி வாங்கவேண்டுமா என்றால் வாங்க வேண்டும். எங்கள் ஊருக்கும், மதுரைக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 30 கி.மீட்டர் இருக்கும். நாங்கள் மதுரைக்கு செல்வதற்கு வட்டாட்சியரிடம் அனுமதி எதுவும் வாங்கினோமா என்றால் வாங்கவில்லை . நாங்கள் அன்றைய

NANTHINI R JEGANATHAN
Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.04 17:57:20 +0530

தினம் செய்த வேலைகளுக்கு தாசில்தாரிடம் அறிக்கை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல் எதுவும் நடக்கவில்லை என்றாலும் , ஆவணங்களோ, பொருட்களோ நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்றும், சாட்சி வேண்டும் என்பதற்காக என்னை சாட்சியாக போட்டு காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஆவணங்கள் தயார் செய்யப்பட்டு சொல்லிக்கொடுத்து நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**7, 8 எதிரிகள் தரப்பில் 1 முதல் 3, 5 எதிரிகள் தரப்பில் செய்த குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்கள்.**

சாட்சி முடிவடைந்த நேரம் : 01.10PM

(ஒம்./-)******

சாட்சியால் திறந்த மன்றத்தில் சாட்சியமளிக்கப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு/சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

NANTHINI R JEGANATHAN

Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.04 17:57:25 +0530

சிறப்பு மாவட்ட நீதிபதி,

கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் தொடர்பான

குற்ற வழக்குகள் தனி சிறப்பு நீதிமன்றம்,

மதுரை.